வேளாண் அறிவியல்

வகுப்பு 12 மதிப்பெண் 90

பகுதிI

I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் 15 x 1 = 15

| வினா எண் | தேர்வு | விடை | மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | இ | தரமான விதை | 1 |
| 2 | இ | போராக்ஸ் | 1 |
| 3 | ஈ | 5 x 4 | 1 |
| 4 | ஆ | P | 1 |
| 5 | அ | ஐசோடிமா | 1 |
| 6 | அ | கறவை மாடு வளர்ப்பு | 1 |
| 7 | ஆ | ஈமேஸ்குலேஷன் | 1 |
| 8 | இ | 19ம் நூற்றாண்டு | 1 |
| 9 | ஈ | 3 ஆண்டுகள் | 1 |
| 10 | ஈ | ஆர்பரேட்டம் | 1 |
| 11 | இ | பச்சை | 1 |
| 12 | இ | தரம் குறைந்த நீர் | 1 |
| 13 | அ | உணர்விகள் | 1 |
| 14 | ஆ | பெப்பரிங் | 1 |
| 15 | ஈ | மேலுரம் | 1 |

பகுதிII

II எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா 24 கட்டாயமாக விடையளிக்கவும்.

10x 3= 30

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 16 | விதை அளவை கணக்கிடும் சூத்திரம்<br>பயிர் எண்ணிக்கை / எக்டர் x விதை எண்ணிக்கை / குத்து x சோதனை எடை (கி) x 100<br>―――――――――――――<br>1000 x 1000 x முளைப்புத்திறன் (%) | 3 |
| 17 | நிலக்கடலையின் பொருளாதார முக்கியத்துவம்<br>இந்தியாவில் பயிரடப்படும் எணெய் வித்துப்பயிர்களில் மிக முக்கியமானது<br>கடலை எண்ணெய் உணவு தயாரிப்பில் பயன்படுகிறது<br>நிலக்கடலை பருப்பில் 48 -50% எண்ணெய்ச்சத்து 25–28% புரதச்சத்து, உயிர்ச்சத்து, தாது உப்புகள், ஆக்ஸிஜனேற்ற தடுப்பான்கள் உள்ளன<br>கடலை எண்ணெய், சோப்பு, அழகுப் பொருட்கள், உயவு எண்ணெய் தயாரிக்கப் பயன்படுகிறது<br>கடலை பிண்ணாக்கு உரம், கால்நடை, கோழித்தீவனமாக பயன்படுகிறது<br>நிலக்கடலை ஓடு அட்டைகள் தயாரிக்க, எரிபொருளாகப் பயன்படுகிறது | 3 |
| 18 | தக்காளி பயிருக்கு வளர்ப்பு ஊடகம் தயார் செய்ய தேவைப்படும் பொருட்கள்<br>தொற்று நீக்கம் செய்யப்பட்ட தேங்காய் நார் ஊடகம் 300கிகி, 5கிகி வேப்பம் பிண்ணாக்கு, 10கிகி அஸோஸ் பைரில்லம், 10கிகி பாஸ்போ பேக்டீரியா தேவை<br>98 துளைகள் கொண்ட குழித்தட்டு ஒன்றுக்கு 1.2 கிகி ஊடகம் தேவை, | 3 |
| 19 | பயிர் பாதுகாப்பின் அடிப்படை கொள்கைகள்<br>தவிர்த்தல்<br>அழித்தல்<br>பாதுகாத்தல்<br>எதிர்ப்பு சக்தி ஊட்டல் | 3 |
| 20 | ஒருங்கிணைந்த பண்ணையம்<br>பயிர்த்தொழிலோடு அதனுடன் தொடர்புடைய உப தொழில்களை சூழ்நிலைக்கு ஏற்றவாறு விஞ்ஞான முறைப்படி இணைப்பது ஒருங்கிணைந்த பண்ணையம் ஆகும் | 3 |

| | | |
|---|---|---|
| 21 | மேம்படுத்தப்பட்ட விதைகளின் வகைகள் மூன்று<br>கருவிதை<br>வல்லுநர் விதை<br>ஆதார விதை<br>சான்றளிக்கப்பட்ட விதை<br>(ஏதேனும் 3) | 3 |
| 22 | இயற்கை வேளாண்மை<br>இயற்கை வேளாண்மை என்பது மண்வளம் காத்து, சுற்றுச்சூழல் மாசுபடாமல் தரமான விளைபொருட்களின் மூலம் மனித மற்றும் விலங்குகளின் ஆரோக்கியத்தை காக்க செயற்கை இரசாயனங்களை தவிர்த்து, இயறகையான பொருட்களை கொண்டு சாகுபடி செய்யும் முறையாகும் | 3 |
| 23 | நாற்று<br>பயிர் பெருக்கம் செய்ய வேண்டிய பயிர்களின் இளம் செடிகளுக்கு நாற்றுகள் என்று பெயர்<br>நாற்றாங்கால்<br>நாற்றுகளைப் பராமரிக்கும் இடத்திற்கு நாற்றாங்கால் என்று பெயர் | 3 |
| 24 | பட்டுப்புழுக்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்கள்<br>பூச்சிகள் – ஊசி ஈ, டெர்மிஸ்டிட் வண்டு<br>நோய்கள் – பூசனா, பாக்டீரியா, நச்சுயிரி மற்றும் புரோம்டோசோவா நோய்கள் | 3 |
| 25 | கலப்படம்<br>ஓர் உணவுப் பொருளின் இயற்கையான தன்மையும், தரமும் பாதிக்கும் விதத்தில் உணவில் வேறொரு பொருளைச் சேர்ப்பது அல்ல உணவிலிருந்து மதிப்புள்ள பொருளை நீக்குவது கலப்படம் எனப்படும் | 3 |
| 26 | ராணிக்கெட் நோய்<br>கோழிகளின் சுவாச உறுப்பு, நரம்பு மண்டலம் பாதிக்கப்படுவதால் பசுமை, வெண்மை கலந்த துர்நாற்றம் கொண்ட கழிச்சல் ஏற்படும், கோழிகள் தலையை இரு கால்களுக்கிடையே வைத்துக் கொள்ளும், கடுமையான காய்ச்சல் காரணமாக வீனம் உட்கொள்ளாது,<br>இளம் குஞ்சுகளுக்கு கக்ஷ1 மற்றும் லசோட்டா தடுப்பூசிகள் போடவேண்டும். இறந்த கோழிகளை எரிக்க வேண்டும் | 3 |
| 27 | தொலை உணர்வியல்<br>தொலை உணர்வியல் என்பது கண்ணுக்குத் தெரிகின்ற மற்றும் தெரியாத தரவுகளைத் தொலைவிலிருந்து, ஒரு பொருளைத் தொடாமலேயே சேகரிக்கும் நுட்பமாகும் | 3 |

| | | |
|---|---|---|
| 28 | நுண்ணுயிர் உரங்களின் பெயர்கள் மூன்று<br>அசோபைரில்லம்<br>ரைசோபியம்<br>அசோலா<br>நீலப்பச்சை பாசி<br>அசட்டோ பாக்டர்<br>சூடோமோனாஸ்<br>பேசில்லஸ் **(ஏதேனும் 3)**<br>VAM | **3** |

பகுதிIII

III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 5x 5 = 25

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 29 | **விதை நேர்த்தி**<br>விதைப் பண்புகளைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், விதைகளை சில பொருட்களுடன் கலப்பதற்கு விதை நேர்த்தி என்று பெயர்<br>பூச்சிக்கொல்லி, பூசனைக்கொல்லி, உயிர் உரங்கள் மற்றும் தேவைக்கேற்ப வேதிப்பொருட்கள் விதை நேர்த்தி செய்ய பயன்படுகின்றன<br>**பயன்கள்**<br>1. விதை, மண் மூலம் பரவும் பூச்சி, நோய்க் காரணிகளிடமிருந்து பாதுகாக்க<br>2. விதை முளைப்புத்திறன், வீரியத்தை அதிகரிக்க<br>3. சேமிப்பு காலத்தைக் கூட்ட<br>4. பயறு வகைகளில் வேர் முடிச்சகளில் தழைச்சத்தை நிலை நிறுத்தி<br>5. உரச்செலவை குறைக்க<br>6. வறட்சியை தாங்கி வளர | **5** |

<table>
<tr><td>30</td><td>நிலக்கடலைக்கு 400கிகி /எக்டர் ஜிப்சம் 40 - 70 நாட்களில் இட்டு மண் அணைக்க வேண்டும்<br>நன்மைகள்<br>1. மேல் மண்ணை இலகுவாக்குகிறது<br>2. சிம்புகள் எளிதில் மண்ணில் இறங்க உதவுகிறது<br>3. கால்சியம் மற்றும் கந்தக குறைபாடு நிவர்த்தி செய்யப்படகிறது<br>4. பருப்பில் எண்ணெய்ச் சத்துகள் அதிகரிக்கவும், ரிட்சியான காய்க்ள்<br>5. தோன்றவும் வழிவகை செய்கிறது<br>6. நூற்புழுவால் ஏற்படும் சொறிநோயை தவிர்க்கிறது</td><td>5</td></tr>
<tr><td>31</td><td>வயிற்று விஷம்<br>இவ்வகை மரந்துகளை தெளிக்கும்போதோ, தூவும் போதோ, பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் தாவர பாகங்களுடன் மருந்தையும் சேர்த்து உட்கொள்கின்றன, இது பூச்சியின் உணவு மண்டலத்தைத் தாக்குகின்றன, உறிஞ்சும், கடித்து உண்ணும் பூச்சிகளால் இதனால் கட்டுப்படுத்தப்படுகின்றன<br>உதாரணம் குயினஸ்பாஸ், ஆலம்டாசைஹலோத்ரின்<br>ஆவி விஷம்<br>இவை காற்றில் ஆவியாகும் தன்மை உடையவை, இந்த மருந்துகளை பூச்சிகள் சுவாசிக்கும் போது அதன் விஷத்தன்மை தீங்குயிரிகளின் சுவாச மண்டலத்தைத் தாக்கி பூச்சிகளைக் கட்டுப்படுத்தும்<br>உதாரணம் அலுமினியம் பாஸ்பைடு மாத்திரை</td><td>5</td></tr>
<tr><td>32</td><td>ஒருங்கிணைந்த பண்ணையத்தின் நன்செய் நிலத்திற்கான மாதிரித் திட்டம்<br>நன்செய் நிலத்தில் சாகுபடி செய்யக்கூடிய முக்கிய பயிர்கள் நெல், வாழை, கரும்பு, மஞ்சள் பயறு வகை மற்றும் எண்ணெய் வித்துப்பயிர்கள் ஆகும்<br>நன்செய் நிலத்திற்கு உகந்த சார்புத் தொழில்கள் பால் பண்ணை, மீன் வளப்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் காளான் வளர்ப்பு ஆகும்
<table>
<tr><td>1</td><td>மக்காச்சோளம் (ஜீன் – ஜிலை)<br>நெல் (செப்டம்பர் – அக்டோபர்)<br>எள் (பிப்ரவரி –மார்ச்)</td><td>0.45 எக்டர்</td></tr>
<tr><td>2</td><td>சூரியகாந்தி (ஜீன் – ஜிலை)<br>நெல் (செப்டம்பர் – அக்டோபர்)<br>பச்சைப்பயறு (பிப்ரவரி –மார்ச்)</td><td>0.50 எக்டர்</td></tr>
<tr><td>3</td><td>மீன் வளர்ப்பு (400 எண்ணிக்கை)<br>கோழி வளர்ப்பு – மீன் பண்ணைக்கு மேல் (20 எண்ணிக்கை)</td><td>0.04 எக்டர்</td></tr>
<tr><td>4</td><td>காளாண் வளர்ப்பு</td><td>0.01 எக்டர்</td></tr>
</table></td><td>5</td></tr>
<tr><td>33</td><td>கலவன் நீக்குதல்<br>♦பயிரை வயலில் விதைது முதல் சேமிப்பு வரை பின்பற்ற வேண்டிய செயல் கலவன் நீக்குதலாகும்<br>♦வேறு சிற்றினத்தைச் சேர்ந்த பயிர், ஒரே சிற்றினத்தைச் சேர்ந்த வேறுபயிர்,</td><td></td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | வேறு இரகம், அதே இரகத்திலிருந்து மாறுபட்ட பண்புகளை உடைய பயிர், களைகளை நீக்குவதற்கு கலவன் நீக்குதல் என்று பெயர்<br>♦ கலவன் நீக்குவதற்கான வயல் ஆய்வு பூக்கும் தருணத்திற்கு முன்பும், பூத்த பின்பும், அறுவடைக்கு முன்பும் 3 - 4 முறை செய்யப்படுகிறது. பூச்சி, நோய் தாக்கப்பட்ட பயிர்களும் நீக்கப்படுகின்றது<br>♦ இது அகத்தூய்மையைப் பாதுகாக்க செய்ய வேண்டிய முக்கிமான செயலாகும்<br>♦ அறுவடை செய்ததிலிருந்து சேமிப்புக்கிடங்கு செல்லும் வரை மாறுபட்ட பண்புகளை உடைய விதைகள் நீக்கப்படுகின்றன | |
| 34 | **தேனின் பயன்கள்**<br>1. தேனில் சர்க்கரை, தாது உப்புகள், அங்கக அமிலங்கள், அமினோ அமிலங்கள், புரதம் உள்ளன.<br>2. தேன் எளிதில் ஜீரணிக்கப்படும் உடனடி சக்தி தரும் உணவாகும்.<br>3 தேன் பசியைத் தூண்டி உடல் வளர்ச்சிக்கு உதவுகின்றன<br>4 குடல் தொடர்புடைய வியாதிகளை குணப்படுத்துகிறது<br>5 இதயம் மற்றும் தசைகளை வலுப்படுத்துகிறது<br>6 தோலுக்கு வனப்பு அளிக்கிறது | |
| 35 | **கலப்பைக் கிழங்கின் அறுவடை மற்றும் மகசூல்**<br>♦ கிழங்குகள் முளைத்த 160 – 180 நாட்களில் காய்களை அறுவடை செய்யலாம்<br>♦ காய்கள் பழுப்பு நிறமாக மாறி தோல் சுருங்கி இருப்பது பயிர் முதிர்ச்சியின் அறிகுறியாகும்<br>♦ காய்களைப் பறித்து 10 – 15 நாட்களுக்கு நிழலில் உலத்த் வேண்டும் காய்கள் மஞ்சள் லந்த சிவப்பு நிறத்திற்கு மாறும் போது விதைகளை பிரித்தெடுக்கலாம்<br>♦ 10 – 15 நாட்களுக்கு தரையில் பரப்பி, உலர்த்தி, மண், கற்களை அகற்றி, சுத்தம் செய்து சாக்குப்பைகளில் அடைத்து விற்பனைக்கு அனுப்பலாம்<br><br>மகசூல் (கிகி / எக்டர் / வருடம்)<br>விதைகள் – 200 – 250<br>கிழங்குகள் – 300<br>காய்களின் தோல் 150 – 200 | |

பகுதிIV

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 2 x 10 = 20

| வினா எண் | விடை | | | மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 36 அ | தென்னையில் குரும்பை உதிரக் காரணம், நிவர்த்தி செய்யும் முறை | | | 10 |
| | | குரும்பை உதிரக் காரணம் | நிவர்த்தி செய்யும் முறை | |
| | 1 | மண்ணின் கார அமில நிலை | அமில மண்ணில் சுண்ணாம்புச் சத்தும் கார மண்ணில் ஜிப்சமும் சேர்த்து நடுநிலைப்படுத்த வேண்டும் | |
| | 2 | வடிகால் வசதி இல்லாமை | அதிகப்படியான நீரை வாய்க்கால்கள் மூலம் வெளியேற்றுவதால் வேர்களின் சுவாசம் தூண்டப்படுகிறது | |
| | 3 | நீர் பற்றாக்குறை அல்லது வறட்சி | தேவைக்கேற்ப வறட்சி மேலாண்மை உத்திகளை மேற்கொள்ளலாம் | |
| | 4 | மரபியல் காரணங்கள் | நல்ல மகசூல் தரும் தாய் மரங்களிலிருந்து விதைக்காய்களை தேர்வு செய்ய வேண்டும் | |
| | 5 | ஊட்டச்சத்து குறைபாடு | பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இடுதல், ஒல்லியான காய்கள் உருவாவதை தடுக்க மரத்றிகு 2.0 கிகி அடியீ மற்றும் 200கி போராக்ஸ் இட வேண்டும் | |
| | 6 | மகரந்தச் சேர்க்கை இல்லாமை | எக்டருக்கு 15 தேனிப்பெட்டிகள் வைக்கவும் | |
| | 7 | ஹார்மோன் குறைபாடு | பாளை வெடித்த ஒரு மாதத்றிகுள் 2, 4 –D சோடியம் உப்பு பிபிஎம் அல்லது NAAPPM என்ற அளவில் மலர்க்கொத்தின் மீது தெளிக்கலாம் | |
| | 8 | பூச்சி மற்றும் நோய்கள்<br><br>**(அல்லது)** | உரிய பயிர் பாதுகாப்பு முறைகளை கையாள வேண்டும் | |

36 ஆ

**மல்லிகை சாகுபடி செய்யும் முறைகள்**

தாவரவியல் பெயர் – ஜாஸ்மினம் சம்பக்

குடும்பம் – ஓலியேசியே

தாயகம் – இந்தியா

**பொருளாதார முக்கியத்துவம்**

♦மல்லிகை உதிரிப் பூவாக, மாலை தொடுக்க,  பெண்கள் தலையில் சூட பயன்படுகிறது,

♦மங்கல நிகழ்வுகளில் பயன்படுகிறது.

♦நறுமண எண்ணெய் தயாரிப்பில் மூலப் பொருளாக பயன்படுகிறது,.

♦சருமத்தை ஆரோக்கியமாக பராமரிக்க, மன அழுத்தம் நீக்க பயன்படுகிறது,

♦தமிழ்நாட்டில் அதிக அளவு சாகுபடி செய்யப்படுகிறது

♦மல்லிகை சாகுபடி வருடம் முழுவதும் வேலை வாய்ப்பு தருகிறது,

**மண் வளம்**

நல்ல வடிகால் வசதி உடைய தோமிலி அல்லது செந்தோமிலி மண் ஏற்றது,

**தட்பவெப்பநிலை**

மிதமான கோடை, குளிர்காலம், நல்ல மழை, சூரியஒளி உள்ள நாட்கள் ஏற்றது

**இரகங்கள்**

இராமநாதபுரம் லேக்கல், சிங்கிள் மோக்ரா, டபுள் மோக்ரா, இருவாட்சி, அர்கா ஆராதனா

**நிலம் தயாரித்தல்**

ஆழமாக உழுத பின் 1.25 மீ இடைவெளியில் 30ஒ30ஒ30 நீள, அகல, ஆழகுழிகள், குழிக்கு 10 கிகி தொழுஉரம் இட வேண்டும்

**நடவு**

ஜீன் – நவம்பர், 6400 பதியன்கள் அல்லது வேர்விட்ட குச்சிகள் / எக்டர்

**நீர் நிர்வாகம்**

நட்டவுடன் வாரம் ஒரு முறை

**உர நிர்வாகம்**

60 :120 : 120கி/செடி கவாத்து செய்த பின் (நவம்பர்) ஒருமுறை, 10கிகி தொழுஉரத்துடன் ஜீன் – ஜீலை மாதம் ஒருமுறை என இருமுறைகள் இட வேண்டும். துத்தநாக சல்பேட் (0.25%) + மெக்னீசியம் சல்பேட் (0.5%) + இரும்பு சல்பேட் (0.5%)  போன்றவற்றை நுண்ணூட்டச்சத்து குறைபாடு தோன்றும்போது 15 நாட்கள் இடைவெளியில் இலை வழி

தெளிக்க வேண்டும்,

**கவாத்து செய்தல்**

வருடம் ஒருமுறை தரை மட்டத்திலிருந்து 50 செ.மீ உயரத்திற்கு நவம்பர் கடைசி வாரத்தில் கவாத்து செய்ய வேண்டும்

**அறுவடை**

மார்ச் – அக்டோபர் மாதங்களில் பூக்கும், காலையில் பூ மொட்டுகளை பறிக்க வேண்டும், நறுமணக் கலவைக்கு நன்கு பூத்த பூக்களை அறுவடை செய்ய வேண்டும்


**மகசூல்**

பூக்கள் 8 – 9 டன்/எக்டர்

---

37 அ

**பயிர் சாகுபடியில் பயிர் பாதுகாப்பு முறைகள்**




1. வெப்பம்
2. காற்றின் ஈரப்பதம்
3. காற்றின் வேகம்
4. மழை
5. இயற்கை எதிரிகள்
6. நில அமைப்பு

1. எதிர்ப்புத்திறன் உடைய இரகங்கள்
2 விதை நேர்த்தி
3. பூச்சி நோய் கண்காணிப்பு

1. இயற்பியல் முறை
2. சாகுபடி முறை
3. இயந்திர முறை
4. சட்ட முறை
5. உயிரியல் முறை
6 இரசாயன முறை
7. மரபியல் முறை
8. தாவர பூச்சிக்கொல்லிகள்

சாகுபடி முறைகள்

சாதாரணமாக நாம் பயிரிடும் போது மேற்கொள்ளும் சாகுபடி முறைகளை அப்படியே கையாண்டு சிறு சிறு மாறுதல்கள் செய்து பூச்சிகள், நோய்களை கட்டுப்படுத்தும் முறை

| | | |
|---|---|---|
| | **இயந்திர முறை**<br>மனித சக்தி மற்றும் சில கருவிகள் / சாதனங்களை பயன்படுத்தி தீங்குயிரிகளைக் கட்டுப்படுத்துதல்<br><br>**இயற்பியல் முறை**<br>வெப்பம், ஈரப்பதம், கதிர்வீச்சு, ஒலி, இடவசதி போன்ற பௌதீகக் காரணிகளைப் பயன்படுத்தி கட்டுப்படுத்துதல்<br><br>**மரபியல் முறை**<br>மரபணு மாற்றப்பட்ட விதைகள் பயன்படுத்துதல்<br><br>**சட்ட முறை**<br>குவாரன்டைன் சட்டம், பூச்சிகள் மற்றும் தீங்குயிரிகள் சட்டம் 1914)<br><br>**உயிரியல் முறைகள்**<br>வாழும் உயிரிகளான ஒட்டுண்ணிகள், இரை விழுங்கிகள் மற்றும் நுண்ணுயிரிகளை ஊக்குவித்து கட்டுப்படுத்தும் முறை<br><br>(அல்லது) | |
| 37 ஆ | **ஊடு சாகுபடி முறைகள்**<br><br>விதை அல்லது நாற்றுகளை நடவு செய்த பின் பயிர்களுக்கு இடையே செய்யப்படும் சாகுபடி வேலைகளுக்கு ஊடு சாகுபடி என்று பெயர்<br><br>1. பயிர் களைதல் மற்றும் பாடுவாசி நிரப்புதல்<br>2. களை எடுத்தல்<br>3. மண் அணைத்தல்<br>4. மண்ணை கிளறிவிடுதல்<br>5. கலவன் நீக்குதல்<br>6. நுனி கிள்ளுதல்<br>7. தோகைஉரித்தல்<br>8. விட்டம் கட்டுதல்<br>9. பக்க கன்றுகளை அகற்றுதல்<br>10. கவாத்து செய்தல்<br>11. முட்டுக் கொடுத்தல் | |

| | | | |
|---|---|---|---|
| | **பயிர் களைதல்**<br>விதைத்த 7 – 5 நாட்களில் ஆரோக்கியமான நாற்றுகளை விட்டு விட்டு உபரி நாற்றுகளை களைதல்<br>**பாடுவாசி நிரப்புதல்**<br>விதைத்த 7 நாட்களில் விதைகள் முளைக்காத இடங்களில் விதைப்பதும், நாற்றுகளை நடுவ<br>**களை எடுத்தல்**<br>தேவையற்ற தாவரங்களை நீக்குதல்<br>**மண் அணைத்தல்**<br>அகன்ற இடைவெளி மற்றும் ஆழமான வேர்த்தொகுதி கொண்ட பயிர்களை பாரின் ஒரு பகுதியில் இரந்து மண்ணை எடுத்து அணைக்க வேண்டும்,<br>உதாரணம் கரும்பு, மரவள்ளி, வாழை<br>**மண்ணை கிளறிவிடுதல்**<br>கருவி கொண்டு கிளறுவதால் மண்ணில் காற்றோட்டம் ஏற்படும். இறுக்கமான மண்ணை இலகுவாக்கலாம்<br>**கலவன் நீக்குதல்**<br>அகத்தூய்மையை பராமரிக்க பயிரின் இரகத்தில் கலந்திருக்கும் வேறு இரகச் செடிகளை நீக்குதல்<br><br>**நுனி கிள்ளுதல்**<br>பக்க கிளைகளை ஊக்குவிக்க (பருத்தி , புகையிலை)<br>**தோகைஉரித்தல்**<br>கரும்பு காய்ந்த தோகைகளை நீக்குதல். பூச்சி, நோய்க்காரணிகள் அழிக்கப்ட்டும்<br>**விட்டம் கட்டுதல்**<br>கரும்பு சாயாமல் இருக்க அடுத்த வரிசையில் உள்ள கரும்பை தோகையில் கட்டுவது<br>**பக்க கன்றுகளை அகற்றுதல்**<br>தேவைப்படாத பக்கக்கன்றுகள், சிம்புகளை நீக்குவதால் தாவர ஊட்டச்சத்த்க்கள் திறம்பட பயன்படும் (வாழை, புகையிலை, சாமந்தி)<br>**கவாத்து செய்தல்**<br>சூரிய ஒளி, காற்றோட்டம் அதிகரித்து மகசூல் அதிகமாகும், பூச்சி, நோய் தாக்கப்பட்ட கிளைகள் அகற்றப்படுதல் (மல்லிகை, முல்லை, ரோஜா சப்போட்டா) | |

| | | |
|---|---|---|
| | **முட்டுக் கொடுத்தல்**<br>வாழைமரங்கள் பலத்த காற்று வீசும்போது சாயாமல் இருக்க மூங்கில் மற்றும் சறுக்கு கட்டைகளைக் கொண்டு தாங்குவது<br><br>மேலும் பயிர் பாதுகாப்பு இரசாயனங்களைத் தெளித்தல, மேலுரம் இடுதல், வளர்ச்சி ஊக்கி தெளித்தல், சூரியகாந்தி பயிரில் பூ முகங்களை உரசுதல் போன்றவற்றையும் ஊடு சாகுபடி வேலைகளாகும் | |